# மினிப்பே பிரதேச சபை

# கண்டி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது றிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மினிப்பே பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பிரதேச சபைக்குச் சொந்தமான 42 ஏக்கர் 1 றூட் 11 பேர்சஸ் அளவான காணி மற்றும் 36 கட்டிடங்களின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் 13 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 9,707,847 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,904,929 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,390,414 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 560 | 653 | 323 |
| (ii) | வாடகை | 2,066 | 2,229 | 615 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,607 | 3,886 | 2 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,139 | 6,394 | 1,307 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 16,999 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 224,143 |

**2.2.3 நீர்க் கட்டணம்**

நீர் இணைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 1,229,139 ஆக இருந்தது.

**2.2.4 கடை வாடகை**

உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 614,724 தொகையான கடை வாடகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.5 தொலைத்தொடர்பு பரிவர்த்தனை கோபுரக் கட்டணம்**

சபையின் அனுமதியின்றி அதிகாரப் பிரதேசத்தில் 09 தொலைத் தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டம் செயற்படுத்தப்படாத சபை அதிகாரப் பிரதேசங்களில் உரிய கோபுரங்களுக்கு அனுமதி வழங்கும் போது சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்**

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் பணத்தினால் 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதி ரூபா 124,900 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு சக்கர உழவு இயந்திரம் மற்றும் கைடெக்ரர் டேலர் என்பன 2009 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2012 ஒக்தோபர் 08 அந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2011 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 13,369 ஆக இருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) இருப்புக் கட்டுப்பாடு